**சுருக்கம்**

அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீடு – அயலகத் தமிழர்களுக்கு விபத்து, ஆயுள் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டம் – நிருவாக அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பொது (மறுவாழ்வு–2)த் துறை**

**அரசாணை (நிலை)எண்.560** **நாள்: 11.09.2023**

**சோபக் கிருது வருடம், ஆவணி –25**
**திருவள்ளுவர் ஆண்டு–2054**
**படிக்கப்பட்டது:**

1. தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு எண்.842, நாள் 06.10.2021.
2. அரசாணை (நிலை) எண்.108, பொது (மறுவாழ்வு–2)த் துறை, நாள்:08.02.2023.
3. அயகலத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.இ1/7428/2023, நாள் 05.09.2023.

***********

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகளுள் பின்வரும் அறிவிப்பும் அடங்கும்:–

**"புலம்பெயர் தமிழர் குறித்த தரவு தளம் (Database) ஏற்படுத்தப்படும். இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவக் காப்பீடு திட்டம், அடையாள அட்டையுடன் வழங்கப்படும்."**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அயலகத் தமிழர் நலனுக்கான ஏனைய இனங்களுடன் தரவுதளம் (விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டத்திற்கான தரவு) (Database) என்ற திட்டத்தினை செயல்படுத்த ரூ.60,88,440/–ற்கு அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. தற்போது, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீட்டில், அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு அடையாள அட்டையுடன் கூடிய விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்ததன்

**த.பி.பா…….**

அடிப்படையில் இத்திட்டங்கள் பின்வருமாறு செயல்படுத்தப்படும் என்று அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்:

**அயலகத் தமிழர் அடையாள அட்டை (NRT ID card)**

அயலகத் தமிழர் அடையாள அட்டை (NRT ID card) என்பது தமிழ்நாட்டிலிருந்து வெளியே வசிக்கும் தமிழர்களை, தமிழ்நாடு அரசாங்கத்துடன் இணைப்பதற்கான பாலமாகும். இந்த புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையானது "அயலகத் தமிழர் நல வாரியம்" வழங்கும் அனைத்து சேவைகளையும், வசதிகளையும் தற்போதும், எதிர்காலத்திலும் பெறுவதற்கான வாய்ப்பினை ஒவ்வொரு அயலகத் தமிழருக்கும் அளிக்கிறது. விண்ணப்பதாரர் தமிழ்நாட்டிற்கு வெளியே இந்தியாவிற்குள் அல்லது அயல்நாடுகளில் பணிபுரிந்தவராக இருக்க வேண்டும்.

**அயலகத் தமிழர் அடையாள அட்டையின் பயன்கள்:-**

**i) தொழிலாளர்களுக்கான காப்பீடு அட்டை (NRT Insurance Card)**

அயலகத் தமிழர் அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு

i) விபத்து மரணத்திற்கு ரூ.10 இலட்சம் மற்றும் நிரந்தர இயலாமை / உடற்குறைபாட்டிற்கு ரூ.5 இலட்சம்.

ii) விபத்தினால் நிரந்தர இயலாமை / உடற்குறைபாடு / வேலையை தொடர இயலாத நிலை ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட நபர் ஒரு உதவியாளருடன் தமிழ்நாடு திரும்பிட ஏதுவாக விமான பயணச்சீட்டு ஏற்பாடு செய்து தரப்படும். மேலும், உடன் வரும் உதவியாளருக்கு தேவையின் அடிப்படையில் இரு வழி பயணச்சீட்டு ஏற்பாடு செய்யப்படும்.

**ii) மாணவர்களுக்கான அடையாள அட்டை (Student ID card)**

தமிழகத்திற்கு வெளியே உயர் கல்விக்காக செல்பவர்கள் "அயலகத் தமிழர் வலைதளத்தில்" பதிவு செய்து அயலகத் தமிழர்களுக்கான மாணவர் அடையாள அட்டை பெறலாம்.

i. விபத்து மரணத்திற்கு ரூ.10 இலட்சம் மற்றும் நிரந்தர இயலாமை/ உடற்குறைபாட்டிற்கு ரூ.5 இலட்சம்.

ii. விபத்தினால் நிரந்தர இயலாமை / உடற்குறைபாடு / படிப்பைத் தொடர இயலாத நிலை ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட நபர் ஒரு உதவியாளருடன் தமிழ்நாடு திரும்பிட ஏதுவாக விமான பயணச்சீட்டு ஏற்பாடு செய்து தரப்படும். மேலும், உடன் வரும் உதவியாளருக்கு தேவையின் அடிப்படையில் இரு வழி பயணச்சீட்டு ஏற்பாடு செய்யப்படும்.

iii. நோய் விபத்துக் காயம் காரணமாக படிப்பினைத் தொடராத பட்சத்தில், ஒரு உதவியாளருடன் ஒருவழி விமானப் பயணச்சீட்டு.

**த.பி.பா.......**

<u>தகுதி</u>

- ✓ 18 முதல் 55 வரையினராக இருத்தல் வேண்டும்.
- ✓ குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் கடவு சீட்டு மற்றும் வேலை வாய்ப்பு ஆவணங்களுடன் அயல்நாட்டில் வசிக்கும் அல்லது பணிபுரிபவராக இருக்க வேண்டும்.
- ✓ ஏற்கனவே தமிழகத்திற்கு வெளியே உயர் கல்வி பயிலும் மாணவர்கள்.

**<u>iii) தீவிர& தொடர் சிகிச்சை தேவைப்படும் நோய்கள் (Critical illness)</u>**

தீவிர மற்றும் தொடர் சிகிச்சை தேவைப்படும் கீழ்க்கண்ட நோய்களுக்கான மருத்துவ செலவிற்காக ரூ.1 லட்சம் வரை வழங்கப்படும்.

இத்திட்டம் விருப்பத்தின் பேரில் விபத்து காப்பீட்டு திட்டத்துடன் கூடுதலாக ஆண்டுக்கு ஒரு முறை ரூ.550/- செலுத்தி இத்திட்டத்தில் இணையலாம்.

**<u>இத்திட்டத்தின் கீழ் வரும் நோய்கள்</u>**

1. Cancer
2. Kidney failure
3. Primary pulmonary arterial Hypertension
4. Multiple Sclerosis
5. Major organ transplant
6. Coronary artery by-pass grafts
7. Aorta graft surgery
8. Heart Valve surgery
9. Stroke
10. Myocardial Infarction (First heart attack)
11. Coma
12. Total Blindness
13. Paralysis

**<u>iv. அ) பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்</u>**

- ➢ ஏற்கனவே இருக்கும் நோய்கள்/ உடல் நல பிரச்சனைகள் இத்திட்டத்தின் வரம்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.
- ➢ பதிவுசெய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளரிடமிருந்து நோயை உறுதிசெய்தல், கடுமையான நோய்க்கு ஆளானதற்கான சான்றுகளுடன், தொடர்புடைய ஆவணங்கள் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.
- ➢ திட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட நோய்க்கான காப்பீடு ஒரு நபருக்கு வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும்.

**அயலகத் தமிழர் அடையாள அட்டையின் கால அளவு**

- மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும்.

**அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் முறை**

**I. தேவைப்படும் ஆவணங்கள்**

- கடவு சீட்டின் (Passport) முன் பக்க மற்றும் பின் பக்க நகல்
- விசா / சிவில் ஐடி / பணிச் சான்று / இக்காமா ஆகியவற்றின் நகல்.
- மாணவர் அடையாள அட்டைக்கு கல்லூரி / பல்கலைக்கழக அடையாள அட்டையின் நகல்
- விண்ணப்பதாரரின் புகைப்படம் மற்றும் கையெழுத்து.

**II. விண்ணப்பக் கட்டணம்**

- முதல் முறை பதிவு கட்டணம் ஒரு அட்டைக்கு ரூ.200/-
  (3 ஆண்டுகளுக்குள் புதுப்பிக்கப்பட வேண்டும்)

**III. புதுப்பித்தல்**

- காலாவதியாகும் தேதிக்கு 3 மாதங்களுக்கு முன் புதுப்பித்தலுக்கு விண்ணப்பிக்கலாம்.
- புதுப்பித்தல் கட்டணம் ஒரு கார்டுக்கு ரூ 350/- (3 ஆண்டுகளுக்கு)
- பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களின் நகல் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும், இக்காப்பீட்டுத் திட்டம் அயலகத் தமிழர் நல வாரியம் மூலமாக வழங்கப்படும் என்றும், அயலகத் தமிழர் நல வாரியத்தின் நிதி கையிருப்பு போதுமான அளவு வரும் வரை. தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில், இதற்கென தேவையான நிதி இவ்வாணையரகம் வாயிலாக பெற்று வழங்கப்படும் என்றும், எனவே, அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு அடையாள அட்டையுடன் கூடிய விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டம் ஆகியவை செயல்படுத்திட ஏதுவாக உரிய அனுமதி வழங்கி அரசாணை வெளியிடுமாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், இதற்கான ஒப்பந்தங்களைப் பெறுவதற்கும் தெரிவு செய்தும் மற்றும் இதர செயல்பாட்டிற்கும் ஆணையர், அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்றும், இத்திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கு மேல் 10% உயர்வடையும் நிலையில் அரசிடம் ஒப்புதல் பெறப்படும் என்றும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

த.பி.பா.......

4. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்தபின், அதனை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 06.10.2021 அன்றைய செய்தி வெளியீட்டின்படி அயலகத் தமிழர் நலனுக்கான தரவுதளம் – விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டத்திற்கான தரவு (Database) ஆகிய திட்டங்களை தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் மூலமாக செயல்படுத்தவும், இத்திட்டத்திற்கான ஒப்பந்தங்களைப் பெறுவதற்கும், தெரிவு செய்வதற்கும் மற்றும் இதர செயல்பாட்டிற்கும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையருக்கு நிருவாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும் இத்திட்டத்திற்கென அனுமதி வழங்கப்பட்ட தொகைக்கு மேல் 10% உயர்வடையும் நிலையில் அரசிடம் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை வெளியிட அரசாணை (நிலை) எண்.334, நிதி (வ.செ.பொ.1)த் துறை, நாள் 22.10.2022–இன்படி நிதித்துறையின் ஒப்புதல் பெற தேவையில்லை.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. நந்தகுமார்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
ஆணையர்,
அயலகத் தமிழர் நலன் மற்றும்
மறுவாழ்வுத் துறை, சென்னை – 5

**நகல்:**
தலைவர்,
அயலகத் தமிழர் நல வாரியம்,
அயலகத் தமிழர் நலன் மற்றும்
மறுவாழ்வுத் துறை, சென்னை –5
(அயலகத் தமிழர் நலன் மற்றும்
மறுவாழ்வுத் துறை ஆணையரின் அலுவலகம் மூலகமாக)

பொது (அ.ந.1)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை –9

உள்ளுறைத் தணிக்கை அலுவலர்,
சென்னை – 9

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

11/9/2023

**பிரிவு அலுவலர்**